கொண்டு வருவதற்கு வாஞ்சு (Wanchoo) குழுவினர் கூறியிருக்கும் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்று செயற்படுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செயற்படுத்தும் நடவடிக்கைகளை மாநில அரசுகளும் எடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்றும் மத்திய அரசை இந்த மன்றம் கேட்டுக்கொள்கிறது".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

(3) தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) 13—8—1973 அன்று தனியார் அலுவல்களுக்குப் பதிலாக அரசு அலுவல்களை எடுத்துக்கொள்வது குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"2—8—1973-ம் நாளன்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின் படி 13—8—1973-ம் நாளன்று தனியார் அலுவல் என்று இருப்பதை மாற்றி அரசு அலுவல்கள் என்றும், 14—8—1973-ம நாளன்று தனியார் அலுவல்கள் என்றும் எடுத்துக்கொள்ள வேண்டும்".

THIRU K. T. K. THANGAMANI : No, No, Sir, I strongly object.
நாங்கள் ஏற்கெனவே 13-ம் தேதி தனியார் அலுவல் என்று சொல்லி முடிவு எடுத்து இருக்கிறோம். அதற்காக சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கிறபோது ....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனியார் அலுவல்கள் 14-ம் தேதி எடுத்துக்கொள்ளப்படும். 13-ம் தேதி அரசு அலுவல்கள் வைத்துக் கொண்டால், இங்கே நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகளை மேலவைக்கு அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். அதனால்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

1973 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"2—8—1973-ம் நாளன்று அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவின் படி 13—8—1973-ம் நாளன்று தனியார் அலுவல் என்று இருப்பதை மாற்றி அரசு அலுவல்கள் என்றும், 14—8—1973-ம் நாளன்று தனியார் அலுவல்கள் என்றும் எடுத்துக் கொள்ளப்படும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.26 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

(6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

Nil.

B. *Reports, Notifications and Other Papers*

47. Notification issued with G.O. Ms. No. 2792, Revenue, dated the 22nd May 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the gift deeds to be executed by the Municipal Council, Mettupalayam in favour of the landless poor people in Mettupalayam town in Nilgiris district.

48. Notification issued with G.O. Ms. No. 225, Labour and Employment, dated the 26th March 1973 in regard to certain amendments to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

49. Fifth Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.